# பட்ஜெட்: அரசாங்க, உள்ளூராட்சி ஊழியர்க்கு ஜனவரி முதல் முப்பது சதவீத சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)
சகல அரசங்க மற்றும் உள்ளூராட்சி ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி முதல் 30 சத வீத சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளதாக நேற்று சமர்ப்பிக்கப்பட்ட வரவு செல

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 22 இதழ் 270
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 07 — 11 — 1992

NOV 1992

## ஓய்வூதியருக்கு 300 ரூபா அதிகரிப்பு

(கொழும்பு)
அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து ஓய்வூதியர்களுக்கு 300 ரூபா அதிகமாக வழங்கப்படும் என்று பிரதமரும் நிதியமைச்சருமான டி. பி. விஜேதுங்க தெரிவித்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வரி ஒரு வருடத்துக்கு நீடிப்பு

(கொழும்பு)
பாதுகாப்பு வரி மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இதே நேரத்தில் வருமானவரி மீதான மேலதிக வரியும் மேலும் ஒருவருடத்துக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

# புலிகள்மீதான தாக்குதல்களின் விளைவு டிசம்பரில் தெரியும்!

## கேர்ணல் சரத்முனசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)
**விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஸ்ரீலங்காப் படைகள் மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகளின் விளைவு இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் எதிர்பார்க்கலாம் என இராணுவ கூட்டுப்படை தலைமையக சிரேஷ்ட இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் புலிகளுக்கு எதிராக மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஸ்ரீலங்கப் படைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நிறுத்தப்படவில்லை. தேடுதல் மற்றும் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. டிசம்பர் இறுதியில் இதன் விளைவுகளை எதிர்பார்க்கலாம் என்றார்.

இதற்கிடையில் கடந்த மாதம் 31ம் திகதி வவுனியாவில் படையினர் மத்தியில் உரையாற்றிய பிரதமர் டி. பி. விஜேதுங்க வடக்கு-

(4ம் பக்கம் பார்க்க)

## ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு

(கொழும்பு)
ஏறாவூரில் அண்மையில் நான்கு தமிழ் மேசன்மார்கள் வெட்டிக்கொல்லப்பட்டதைக் கண்டித்து ஹர்த்தால் அனுஷ்

(4-ம் பக்கம் பார்க்க)

## தபால்களை இன்று சேர்ப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)
குமண கப்பல் நாளை அல்லது நாளை மறுதினம் இங்கிருந்து புறப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் வெளியூர் தபால்களை அனுப்புவோர் இன்று அவற்றை தபாலில் சேர்க்கும்படி யாழ் மாவட்ட பிரதித் தபால் அதிபர் தெரிவித்துள்ளார். (159)

## ராணுவத்தில் 80 ஆயிரம் படையினர் உள்ளனர்

(கொழும்பு)
இலங்கை இராணுவத்தின் தற்போதைய மொத்த பலம் 80 ஆயிரம் என்று வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆகஸ்ட் மாதம் தீவகத்தில் விடுதலைப்புலிகளின் கண்ணிவெடியில்

(4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் படையினரை தைரியமூட்ட அரசு முயற்சி

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொள்ளும் அதிரடித் தாக்குதல்களால் பொலிஸ் உயர்அதிகாரிகளும், இராணுவத்தினரும் பெரிதும் மனக்கிலேசம் அடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்பகுதியிலுள்ள படை

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய அரச தம்பதி கொழும்பு விஜயம்

(கொழும்பு)
ஜப்பானிய இளவரசர் அகிஹிதோவும் இளவரசியும் மூன்று நாள் நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்தனர்.

இவர்கள் நேற்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை அவரின் வாசஸ்தலத்தில் சந்தித்து உரையாடினர்.

இன்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை சந்திக்கும் இளவரசர் தம்பதிகள் கண்டிக்கும் செல்லவுள்ளனர். (வி)

## தபால் அடையாள அட்டை படிவங்கள் தருவிப்பு

(யாழ்ப்பாணம்)
தபால் அடையாள அட்டைக்கான படிவங்கள் அடுத்து வரும் கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன.

இப்படிவங்கள் வந்து சேர்ந்ததும் தபால் அடையாள அட்டை விநியோகம் துரிதமாக நடைபெறும்.

மேலதிக ஊழியர்களை நியமித்து அடையாள அட்டைகளை துரிதமாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வடமாகாண பிரதித் தபால் அத்தியட்சகர் தெரிவித்தார். (159)

## பரீட்சை எழுத கொழும்பு சென்றோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

(மானிப்பாய்)
எழுதுவினைஞர் சேவை அதி சிறப்பு பிரிவு (சுப்பிரு) பரீட்சை எழுத கொழும்பு சென்ற வடபகுதியைச் சேர்ந்த பலர் ஏமாற்றத்துடன் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளனர்.

இவர்களுக்கான பரீட்சை கடந்த 31-ந் திகதி நடைபெறவிருந்தது இதற்கு யாழ்

4 ம் பக்கம் பார்க்க)

## இந்தியா கடும் நடவடிக்கை

(புதுடில்லி)
சட்டத்திற்கு புறம்பான முறையில் இந்தியாவிற்குள் நுழைய முயல்வோரை தடுக்கும் வரையில் புதிய அனுமதி வழங்கும் அட்டை நடைமுறை கண்டிப்பாக அமுல்படுத்தப்படும் என மத்திய உள்துறை அமைச்சர் எம். எம். ஜேக்கப் தெரிவித்துள்ளார்,

(4ம் பக்கம் பார்க்க)

## 1993-ம் ஆண்டுக்கான பாதுகாப்பு செலவினம் 1800 கோடி ரூபா!

(கொழும்பு)
அடுத்த வருடத்துக்கான பாதுகாப்பு செலவீனம் 1,800 கோடி ரூபாவாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான திரு. டி. பி விஜயதுங்கா நேற்று நாடாளுமன்றத்தில் புதிய வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்து பேசுகையில் இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

வடக்கு கிழக்கில் தற்போது நடைபெற்றுவரும் யுத்தம் முடிவடைந்து அமைதி நிலவு

4 ம் பக்கம் பார்க்க

## யாழ்-திருமலை கப்பல் சேவை விரைவில் ஆரம்பமாகும்

(கொழும்பு)
யாழ் பயணிகளுக்கான கப்பல் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் பிரிவு அறிவித்துள்ளது.

திருமலையிலிருந்து வாரத்தில் இருநாட்கள் இக்கப்பல் சேவை நடத்தப்படவுள்ளது. இன்னும் மூன்று வாரங்களில் இச்சேவை ஆரம்பிக்கப்படலாம் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் பிரிவு தெரிவித்துள்ளது

யாழ். செல்லும் பயணிகள் 100 பேர் குறிப்பிட்டளவு

[4ம் பக்கம் பார்க்க]

## பருவ மழை மாரில் தருவதந்தக்காடு

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஓட்டகபுலம் சமதிதர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ். 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி–6888)

### ஆண்டு 6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதிமாதிரிப் பரீட்சை 07-11-92 சனி மு. ப 8-00 மு. ப. 10-00 நடைபெறும். ஆண்டு 6 அனுமதிப்பரீட்சைக்கான துரித மீட்டற்பயிற்சியையும் (விடைகளுடன்) மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் நடைபெறுன்றன. புதிய கல்வி நிலையம் 219. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-6948]

### விற்பனையாகின்றது

சித்திரம்-ஆண்டு II, சைவநெறி ஆண்டு 10, 11 கந்தன் புகழ் ஷஷ்டி கவசம் ஆறுபடை வீடு, இவை யாவற்றிற்கும் வியாபாரிகளுக்குத் தகுந்த கழிவு வழங்கப்படும். ஒவ்செட் படத்துடனை கலண்டர்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும், விலாசம் பதிப்பித்தும் பெற்றுக்கொள்ளலாம். ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தகசாலை. (ஏ-2542)

### ஆண்டு-5 புலமைப்பரிசில்

ஆண்டு 5 புலமைப் பரிசில் 1993 மாதிரிப் பரீட்சை 07-11-92 சனி மு ப. 8-00, மு. ப. 11-00 (தமிழ், கணிதம், ஆங்கிலம்] நடைபெறும். துரித மீட்டற் பயிற்சியையும் (விடைகளுடன்) மாதிரி வினாத்தாள்களையும் பெற்றுக்கொள்ளலாம். மாதிரி வகுப்புகளும் ஆரம்பமாயுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (சி-6949]

### வெளிவந்துவிட்டது மார்க்கம்

சமூக பொருளாதார ஆய்வு சஞ்சிகை உயர்தர மாணவர்களுக்கும் வெளிவாரி பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உகந்தது. பன்னிரண்டு கட்டுரைகள் அடங்கியது, கிடைக்கும் இடம்: தினேஸ் புத்தகசாலை, 19 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (எ–2566)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருதழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமான வரி. சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி.இராசரத்தினம். 121, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி–6954)

## பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பின் கல்வி டிப்ளோமா 1991/92 கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை 30-11-92க்கு முதல் பதிவு செய்யும்படி. நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டோருக்கு ஏற்கனவே கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இவர்களின் பெயர்ப்பட்டியல்] ஒன்று பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் இடப்பட்டுள்ளது.

---

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

## பதவி வெற்றிடம்

கீழே குறிக்கப்பட்ட பதவிக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992–11–27ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**பதவி** கவனிப்பாளர் (சுகாதார சேவைகள் ''இடம் நிரப்பு நியமனம்'' Attendant [Health Services ''Stop Gap Appointment'

**சம்பளம்:–** ரூபா 71/– நாளொன்றுக்கு.

**தகைமைகள்:-**

(1) எட்டாம் வகுப்பு சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.

(2) வைத்தியசாலையொன்றில் அல்லது சுகாதார நிலைய மொன்றில் ஆகக்குறைந்தது ஒரு வருட அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

**வயது–** 40 வயதிற்குமேற்பட்டவராக இருத்தல் ஆகாது.

**தெரிவு–** பொதுஉளச்சார்பறிப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்.

**குறிப்பு–** ஒரு வருடத்திற்கான ஒப்பந்த அடிப்படையில் நியமனம்பெறவிரும்புவோரது கோரிக்கையும் பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்த அடிப்படையிலான நியமனமாயின் வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது. ஒப்பந்த அடிப்படையிலாயின் மாதாந்தம் ரூபா 2985/– (நிலையானது) வழங்கப்படும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவங்கள் மட்டும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம், தபால் மூலம் படிவங்களை பெறவிரும்புவோர் சுயமுகவரியிடப்பட்டதும் முத்திரையொட்டப்பட்டதுமான 23X10 ச.மீ. அளவுடைய கடித உறைகளை அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் தெளிவில்லாத விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி.
1992-11-02 (எ-2570)

---

## இராசி பலன்

07-11-1992

சனிக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 22)

துவாதசி பி. ப 1–04 வரை. உத்தரட்டாதி பி. ப. 3 49 வரை. சித்தயோகம், இராகுகாலம் காலை 9–05 முதல் 10–35 வரை. சுபநேரம் மாலை 3 05 முதல் 4-35 வரை. சனிப்பிரதோஸ விரதம்

மேடம்: முயற்சி பயனளிக்காமை, பண நெருக்கடி, விவாதம்

இடபம்: காரியம் கைகூடல், நோய் நிவர்த்தி, வெகுஜன மதிப்பு.

மிதுனம்: தொழில் லாபம், குடும்ப மகிழ்ச்சி, பயண நன்மை.

கடகம்: கீழ்படிதல், பண நஷ்டம், உறவினர் துன்பம்.

சிங்கம்: ஏமாற்றம், குடும்ப அலைச்சல், தொழில் பாதிப்பு.

கன்னி: சுபகாரியம், மேலோர்சகாயம், அதிகாரம்.

துலாம்: தொழில் கீர்த்தி, வித்தைச்சிறப்பு, காரியசித்தி.

விருச்சிகம்: வீண்பழி, தடுமாற்றம், அனுவசியப்பயம்

தனுசு: தாழ்மைப்படல், கோபவார்த்தை, விரோதம்.

மகரம்: தனலாபம், பிறருக்கு உதவுதல், குடும்ப உல்லாசம்.

கும்பம்: மனச்சுமை, பலவீனம், பெற்றோர் கவலை.

மீனம்: இனசன மகிழ்ச்சி, உத்தியோக லாபம், தர்ம சிந்தனை.

— ஹோஸ்பர்

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். ரோட்டறிக் கழக ஆதரவில் இன்று 7-ம் திகதியும், 8-ம், 9-ம் திகதிகளிலும் யாழ் புனித. சம்பத்தரிசியார் கல்லூரியில் ஓர் புகைப்படக் கண்காட்சி நடைபெறவுள்ளது இன்று ஆரம்ப நாளன்று காலை 7 மணிக்கு திரு. மார்க்கிருல் கண்காட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

★

(யாழ்ப்பாணம்)

நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கிடையேயான பேச்சு, கட்டுரை சுவரொட்டிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8-30 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

சுவரொட்டிப் போட்டிகளில் பங்குபற்றும் மாணவர் 35X20 செ.மீ வரைதல் கடதாசி அல்லது பிறிஸ்டல் மட்டை மற்றும் வண்ணக் கலவைகள் உபகரணங்கள் அனைத்தையும் கொண்டுவருதல் வேண்டும். போட்டியில் பங்குபற்றுபவர்களுக்குரிய சுட்டெண்கள் போட்டித் தினத்தன்று அலுவலகத்தில் வழங்கப்படும்.

★

(மானிப்பாய்)

மூளாய் வரதின்புலோ சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபைப் பொதுக்கூட்டம் இன்று 7-ம் திகதி சனிக்கிழமை பி ப 2 மணிக்குத் மேற்படி தேவஸ்தான மண்டபத்தில் திரு சி. சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

★

(கொழும்புத்துறை)

யாழ். மாநகராட்சி மன்ற சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஆட்சிக் குழுக்கூட்டம் இன்று 7 ம் திகதி சனிக்கிழமை பி. ப 3 மணிக்கு யாழ். நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு. டானியல் அன்ரனி தலைமையில் நடைபெறும். ★ (154)

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தர வகுப்புகளில் தூயகணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்று 7ம் திகதியும், 8ம் 9ம் திகதிகளிலும் யாழ். இந்துக் கல்லூரியில கருத்தரங்கு நடைபெறும்.

இக்கருத்தரங்கு தினமும் காலை 8-3 மணி தொடக்கம் பி. ப. 4 மணி வரை நடைபெறும்.

---

## அடையாள அட்டை படிவங்கள் தட்டுப்பாடு

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர் அலுவலகங்களில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் படிவங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைக்கு புதிதாக விண்ணப்பிப்பவர்களும், தொலைந்த, பழுதடைந்த அடையாள அட்டைகளுக்குப் பதிலாகப் புதிய அடையாள அட்டையைப் பெற விண்ணப்பிக்கும் படிவங்களும் கிராமசேவையாளர் அலுவலகங்களில் முடிவடைந்துவிட்டன.

ப்படிவங்கள் யாழ்.செயலகத்திலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்திலும் முடிவடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (71)

## 3000 மீனவர்க்கு கடற்றொழில் உபகரணங்கள்

(நல்லூர்)

மூவாயிரம் கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடி வலை உபகரணங்களை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் வழங்கவுள்ளது இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள முகாம்களில் தங்கியுள்ளவர்க்கு மட்டுமே முதல்கட்டமாக மேற்படி உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த 1500 பேருக்கு' சூடை வலையும்' வடமராட்சிப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளைச் சார்ந்த 1500 பேருக்கு 'டிஸ்கோ வலையும்' வழங்கப்படவுள்ளது. இச்செயல் திட்டத்திற்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கத்தினால் நாற்பத்திரண்டு லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது இவ்வலை உபகரணங்கள் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது.

இத்திட்டத்தைச் சரிவர அமுல்படுத்த இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப்பட்ட வெளிக்கள உத்தியோகத்தர் மூலமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுகளின் மூலமாகவும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது — (159)

---

### விலங்கியல்

R. N. ஈஸ்வரதாசன்
B Sc. (Cey.)

93 A/L
94 A/L

**புதிய பிரிவுகள்**

ஆரம்பம்: 8-11-92 ஞாயிறு

முற்கூட்டியே அனுமதி பெறவும் நேரஅட்டவணை நிறுவனத்தில்

**சயன்ஸ் சென்ரர்**

எழிலகம்–முன் ஒழுங்கை யாழ்ப்பாணம்.
(சி-6955)

---

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம் PATRICIAN INSTITUTES

### அகில உலக கெயர் மரவேலை, கட்டுவேலை பயிற்சிநெறிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன்
(CARE INTERNATIONAL)
இணைந்து
எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சித் தகைமை:

15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்'
8–ம் வகுப்பும் அதற்கு மேற்பட்டோரும்

கொடுப்பனவு:

ஸ்தாபனப் பயிற்சியின்போது ($2\frac{1}{2}$ மாதம்) மாதம் 600/-வும், பயிலுனர் பயிற்சியின்போது (10 மாதம்) வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள்:**
**13 - 11 - 1992 இற்குப் பிந்தாமல்.**

பதிவாளர்,
**பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்**
இல. 59, சென் பற்றிகஸ் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரியில் நேரில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
(ஏ-2573)

# கடற்புலிகளின் நடவடிக்கை படையினருக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

கடற்புலிகள் படையினரை நிலைகுலையச் செய்யும் தங்கள் தாக்குதல் நடவடிக்கைமூலம் அவர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்குகிறார்கள் என்று ஐலண்ட் பத்திரிகையில் வெளியிட்டுள்ள கட்டுரையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு போரில் கடற்புலிகள் ஆற்றிவரும் பங்கு விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரச படைகள் நடத்திவரும் போரில் விடுதலைப்புலிகளை மேலும் ஆற்றல் வாய்ந்தவர்களாக ஆக்கியுள்ளதென அறியமுடிகிறது. தரையைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக் கூட்டுப்படைகள் போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அதன் வளங்களில் ஒரு பகுதியை கடற்புலிகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்குச் செலவிட வேண்டியுள்ளது என்றும் அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தரையில் போராடும் விடுதலைப்புலி போராளிகளும் கடற்புலிகளும் பாரிய உயிர் இழப்புக்களையும் அழிவுகளையும் ஏற்படுத்த ஆயத்தமாக இருப்பதால் வடக்கிலும், கிழக்கிலும் ராணுவம் பெற்ற வெற்றிகளை இழக்க வேண்டி வரும்.

இந்த ஆண்டு இறுதிக்குள் விடுதலைப்புலிகளை வெற்றி கொள்ள வேண்டும் என்று அரசிற்கிருந்த நம்பிக்கையை அவர்கள் தமது தாக்குதல்கள் மூலம் சிதறடித்துள்ளனர். விடுதலைப்புலிகள் பெரும் உற்சாகத்துடன் நடத்தும் போருக்கு எதிராக நல்ல பயன் தரக்கூடிய யுக்திகளை படையினர் கையாளத் தவறின் பல அச்சம் தரும் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிவரும் படையினரதும் தளபாடங்களினதும் இழப்புகள் மிகவும் கூடுதலாகவுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. (ரி)

## புதிய பணிப்பாளர்

(பண்டத்தரிப்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார, மகளிர் விவகார அமைச்சின் பணிப்பாளராக டாக்டர் எஸ் சண்முகதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். (72)

# புலிகளை பலமிழக்க செய்ய முடியாது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளை இலகுவில் பலமிழக்கச் செய்ய முடியாது என்று புலிகளுக்கு எதிரான போரில் தங்கள் ஆட்களை அரசாங்கத்திற்கு கொடுத்து உதவிவரும் தமிழ் குழுவின் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்

(4ம் பக்கம் பார்க்க)

## 20 தோட்டத்துரைமார் பதவியிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டு காரணமாக 20 தோட்டத்துரைமார் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

தோட்ட நிர்வாகங்களில் ஊழல் புரிந்த காரணத்தால் இந்த 20 பேரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரான திரு. ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

## அ.இ.மு.க. - காங்கிரஸ் கூட்டு உடையும் அபாயம்

(சென்னை)

அ. தி. மு. க. — இந்திரா காங்கிரஸ் கூட்டு உடையும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவைப் பதவியில் இருந்து விலக்க முயலும் சுப்பிரமணியசுவாமியின் இயக்கம் காரணமாக, ஆளும் காங்கிரஸ் கட்சிக்கும், அ. தி. மு. க வுக்கும் இடையேயான கூட்டு அபாயத்தில் இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

## தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு இன்று யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் காலை 9 மணி முதல் பத்து மணிவரை சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும் நல்லூர், திவகம், காரைநகர் உ. அ. அதிபர் பிரிவில் காலை 10-30 முதல் 12 மணிவரை வனகரத்தினம் ம. ம. வி யிலும் நடைபெறும்.

கோப்பாய் உ. அரசாங்க அ. பிரிவில் 2 மணி முதல் 3 மணி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் 3-15 முதல் 4 மணிவரை அச்சுவேலி ம. வி. யிலும் 4. 15 முதல் 5 மணிவரை உரும்பிராய் இந்துக்கல்லூரியிலும் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை உடுவில் உ. அ அ. பிரிவில் 9 மணிமுதல் 10 மணி வரை சுன்னாகம் மயிலணி பாடசாலையிலும், தெல்லிப்பழை உ. அ. அ பிரிவில் 10-30 - 11 30 வரை மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்திலும் சண்டிலிப்பாய் உ. அ. அ பிரிவில் 1மணிமுதல் 2 மணி வரை சண்டிலிப்பாய் மகா வித்தியாலத்திலும் சங்கானை காரைநகர் உ. அ. அ. பிரிவில் 2 30 முதல் 3. 30 வரை வட்டு இந்துவிலும் நடைபெறும்.

## தேசிய சேமிப்பு வங்கியின் நடமாடும் வங்கி சேவை இன்று மானிப்பாயில்

(உடுவில்)

வங்கிக்குச் சென்று கணக்குகளை ஆரம்பிக்க முடியாத பொதுமக்களின் நலன் கருதி, சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கிக் கிளையினர் இப்பகுதிகளில் நடமாடும் வங்கிச் சேவையை நடத்தி வருகின்றனர்.

வட இலங்கை சர்வோதயத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இச்சேவை, இன்று 7ம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் மெமோறியல் லேனிலுள்ள சர்வோதய நிலையத்தில் மேற்கொள்ளப்பட இருக்கிறது

இது போன்ற வங்கிச் சேவையை முன்னர் நடத்தியபோது, சுமார் 300பேரும், உடுவிலில் நடத்தியபோது சுமார் 325 பேரும் கணக்குகளை ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டின் இறுதி நடமாடும் சேவையாக மானிப்பாய் சர்வோதய நிலயத்தில் நடத்தப்படவுள்ள இச்சேவையைப் பயன்படுத்தி, பொதுமக்கள் கணக்குகளை ஆரம்பிக்கமுடியும் எனவும், முன்னைய எமது சேவைகளின் போது பயனடையத் தவறியவர்களுக்கு இது ஒரு இறுதிச் சந்தர்ப்பமாகும் எனவும், சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் திரு. எஸ். சிவராசா தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் எமது சேவையின்போது, சாதாரண கணக்குகள், நிலையான சேமிப்புக் கணக்குகள், சிறுவர் சேமிப்புக் கணக்குகள், அறக்கொடைகள் போன்ற எல்லாவித வங்கிக் கணக்குகளையும் ஆரம்பிக்கமுடியும் எனவும் அவர்தெரிவித்துள்ளார். (109)

## ஒய்வூதியம்

(கொழும்பு)

விமானப்படை, கடற்படை ஆகியவற்றில் தொண்டர் சேவையில் பணி புரிந்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்று பிரதமர் டி. பி. விஜதுங்கா தெரிவித்துள்ளார்.

# மாஸ்கோ நோக்கி பல இலங்கையர் படையெடுப்பு

(கொழும்பு)

வெளிநாடு செல்லும் நோக்குடன் சென்ற மூவாயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் மாஸ்கோவில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாஸ்கோ வீதிகளில் தற்பொழுது கூடுதலான தமிழர்களைக் காணக்கூடியதாக உள்ளதாக அங்கிருந்து திரும்பியவர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாடு செல்லும் நோக்கக் கொழும்பில் தங்கியிருந்த பலர், தற்போது மாஸ்கோ நோக்கிப் படையெடுத்து வருகின்றார்கள்.

மாஸ்கோவுக்குள் நுழைவதற்குத் தற்போது தாராள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலேயே, மாஸ்கோ நோக்கிய படையெடுப்பு இடம்பெற்று வருகிறதென்றும் தெரிய வருகிறது.

இதேவேளை ஏற்கனவே மாஸ்கோ சென்ற பலர், உதவிகள் எதுவுமின்றித் தங்கின்றனர்.

மாஸ்கோவில் தங்கியிருக்கும் தமிழர்கள் சிலரிடம், பெறுமதி வாய்ந்த பொருள்கள் பல அங்குள்ளவர்களால் பறிமுதல் செய்யப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரி)

## மருத்துவ பீடாதிபதி ராஜினமா; மாணவர்கள் வருத்தம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நடந்த சம்பவத்துக்காக நாம் ஆழ்ந்த வேதனையும் விசனமும் அடைகிறோம். மருத்துவபீடாதிபதி தமது ராஜினாமாவை வாபஸ் பெற்று மீண்டும் பதவி ஏற்று முன்னர் போன்று திறமையுடனும் திடத்துடனும் சேவையை தொடரும்படி மருத்துவ பீடாதிபதியை மிகப்பணிவுடனும் விசேடமாகவும் வேண்டுகிறோம்.

இவ்வாறு மருத்துவபீடத்தின் 1984-1985 ஆண்டுப்பிரிவு மாணவர்கள் பிரதிநிதிகளாலும். 1985-1986 ஆண்டுப் பிரிவு மாணவ பிரதிநிதிகளாலும் மருத்துவ பீடாதிபதி எஸ். பாலசுப்பிரமணியத்தின் ராஜினமாவை வாபஸ்பெறும்படி வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது!

பல்கலைக்கழகத்தின் எல்லைகுள் இடம்பெற்ற சில துரதிர்ஷ்டமான நிகழ்வுகள் புலமை மிக்க எமது பீடாதிபதியின் ராஜினமாவுக்கு வழிவகுத்தது கண்டு நாம் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம்.

தற்போது நிலவும் கஷ்டங்கள் மற்றும் நிர்ப்பந்தங்களுக்கு மத்தியில் சலியாத உறுதியுடனும், உணர்வுடனும் வைத்திய மாணவர்களின் நலனுக்காக கடந்த காலத்திலும் தற்போதும் அவர் ஆற்றிய அளப்பெரும் சேவைகளை நாம்வெளிப்படையாக மனம் திறந்து ஒப்புக்கொள்கின்றோம்.

பீடாதிபதியை வேதனைப்படுத்திய அந்த துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கக் கூடாது என்பதே எமது உளப்பூர்வமான கருத்து.

பீடாதிபதி தமது ராஜினமாவைச் சமர்ப்பிக்கக்கூடிய பாரதூரமான நிலைக்குச்செல்லாதவாறு அந்த நிகழ்வுகள் ஏற்படுத்திய மனவேற்றுமைக்கு சிநேகமானமுறையில் தீர்வு கண்டிருக்க வேண்டும்.

சிரேஷ்ட மாணவர்களுடன் புதிய மாணவர்கள் சேர்ந்து கொள்வது தொடர்பாக நல்லொழுக்கக் கோவை ஒன்றை வகுத்து அமுலுக்குக் கொண்டுவராத நிலையால்தான் வருத்தப் பிரச்னை எழுந்தது.

சிரேஷ்ட மாணவர்களின் நலனை முன்னிட்டு பல்கலைக்கழகமானியகுழுவும், பல்கலைக்கழக நிர்வாகமும் சேர்ந்து ஒரு நல்லொழுக்கக் கோவை ஒன்றை உருவாக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு இருந்தால் பல்கலைக்கழகத்துக்கு உள்ளேயும், வெளியேயும் மாணவர்கள் மத்தியில் பதற்றத்தைகுறைப்பதற்கும், உகந்த நல்ல சூழலைக் கொண்ட சந்ததி ஒன்றுக்கு வழிசமைக்கவும் ஊன்றுகோலாய் அமையுமென நம்புகிறோம்.

நாங்கள் எங்களை ஒரு குடும்பமாகக் கருதுகிறோம். இந்த நிகழ்வுகள் எமது குடும்ப அங்கத்தவர்களைப் பாதித்திருந்தால் அவர்களைப் புண்படுத்தாதவாறு தீர்க்கப்பட்டிருக்க வேண்டும்

அவர் பீடாதிபதியாக இருப்பது எமது பீடம் சர்வதேச அங்கீகாரத்தை பெறுவதற்கு உதவும் என்று நம்புகின்றோம்

இந்த வேண்டுகோள் எமது பீடம் மற்றும் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு மட்டுமல்ல எமது சமூகத்துக்கும் நன்மை பயக்கும்'' மேற்கண்டவாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சு)

## அடையாள அட்டை விவகாரம் முறைப்பாடு செய்யும் காலக்கெடு 12ந்திகதி முடிவு

(யாழ்ப்பாணம்)

தொலைந்த அடையாள அட்டை சம்பந்தமாக இணைப் பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கு, அவ்வப் பகுதிக்குரிய கிராமசேவை உத்தியோகத்தர்களிடம் முறைப்பாடு செய்வதற்கு, கொழும்பு ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் அனுமதிக்கப்பட்ட காலக்கெடு, இம்மாதம் 12ம் திகதியுடன் முடிவடைகின்றது.

நாடு தற்போதுள்ள நிலையிலும், கடந்த ஒரு வருட காலத்தில் எதுவித மாற்றங்களும் ஏற்படாமையாலும், பொலிஸ் நிலயங்கள் இயங்காமையாலும், அடையாள அட்டையின் இணைப் பிரதியைப் பெறுவதற்கான முறைப்பாடு செய்வதில் பொதுமக்கள் மிகுந்த கஷ்டப்படவேண்டியுள்ளதாலும், கிராம சேவை உத்தியோகத்தர்களிடம் அந்த முறைப்பாட்டைச் செய்கின்ற அனுமதியை மேலும் 6 மாதங்கள் நீடித்துத் தரும்படி கோரி, யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்

கொழும்பில் தற்போது நிற்கும் யாழ். அரச அதிபர் இது விடயமாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளருடன் நேரடியாகப் பேசி, இதற்கான அனுமதியைப் பெற்று வருவாரென்று யாழ் செயலகத்தின் ஆட்பதிவுத் திணைக்கள உயர் அதிகாரி தெரிவித்தார். (161)

## வரப்பெற்றோம்

(யாழ்ப்பாணம்)

'சாளரம்' நவம்பர்-டிசம்பர் - 92 இதழ் நேற்று வெளிவந்துள்ளது.

இந்த இதழில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முறை, மாவீரர் நினைவு மரபுகள், வல்வையில் இருந்து அமெரிக்காவுக்கு கப்பலோட்டிய தமிழருடன் சந்திப்பு, திருமலை நடராசனின் கதை, விருது ஒன்று கிடைத்தான போது (பரிசுச் சிறுகதை) ஆஸ்பிரின் புற்று நோயைத் தடுக்குமா? போன்று பல்வேறு கவிதைகள், கட்டுரைகள், கதைகள் தாங்கி வெளிவந்துள்ளது. (சு)

# தமிழகத்தில் கைதான 26 இலங்கை மீனவர்களையும்

## விடுவிக்குமாறு ஜெயலலிதா பணிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டு கடற்பரப்பில் வைத்து இந்திய கடற்படையினரால் அண்மையில் கைது செய்யப்பட்ட 26 இலங்கை மீனவர்களையும் விடுதலை செய்யும்படி தமிழ்நாட்டு முதல் அமைச்சர் செல்வி ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இந்த மீனவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கை வாபஸ் பெற்று இவர்களின் மீன்பிடி சாதனங்களையும் வள்ளங்களையும் ஒப்படைக்கும்படி முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சரின் இந்த நடவடிக்கைக்கு இலங்கை கடல் தொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா நன்றி தெரிவித்துள்ளார். (வி)

# ரஷ்ய ஹெலி விபத்தில் 31 பேர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவின் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று நேற்று விபத்துக்குள்ளானதில் 31 பேர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

5 பேர் விமான பணியாளர்கள் எனவும் மிகுதி 26 பேர் இராணுவத்தினராய் இருக்கலாம் என்றும் இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

# புலிகள் தாக்குதல்

## படையினர் மூவர் காயம்

(கொழும்பு)

யாழ். குடாப்பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் அரசபடையினருக்கும் இடையில் நேற்று ஏற்பட்ட மோதலில் 3 படையினர் காயமடைந்ததாக சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கொழும்பில நேற்று தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் பலாலிப்பகுதியில் அரச துருப்புகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாகவும் பின்னர் படையினர் பலாலிவிமானதள முகாமிற்கு திரும்பிவிட்டதாகவும் அவ் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (க)

## கண்டெடுப்பு

(மானிப்பாய்)

யாழ். செயலக ஒய்வூதியப் பிரிவில் இரு தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் பிரதம லிகிதரிடம் இவற்றைப் பெற்றுக் கொள்ளலாமென்று தெரிவிக்கப்படுகிறது. (71)

## மறைக்கல்வித்தேர்வு பரீட்சை நவ. 14ல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மறை மாவட்டக் கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் மறைக்கல்வித்தேர்வுப்பரீட்சை எதிர்வரும் 14-ம் திகதி சனிக்கிழமைநடைபெறவுள்ளது.

கடந்த பல வருடங்களாக நடைபெறாமல் இடைநிறுத்தி வைக்கப்பட்ட மேற்படிப் பரீட்சை இம்முறை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஒரே நேரத்தில் நடைபெறவுள்ளது. (வி)

## ஒரு கோடி டொலர் இலங்கைக்கு கடனுதவி

(யாழ்ப்பாணம்)

அமெரிக்க அரசு இலங்கை வங்கிக்கு ஒரு கோடி அமெரிக்க டொலர்களை வீடமைப்புக் கடனாக வழங்கியுள்ளது.

இக்கடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினூடாக வறிய மக்களுக்கு வழங்கப்படும்.

இக்கடனைப் பெறுபவர்கள் அதனை 15 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தவேண்டும்.

**பட்ஜெட்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி ஊழியர் ஒருவர் ஆகக்குறைந்தது 500 ரூபாவுக்கு குறையாத சம்பள அதிகரிப்பைப் பெற முடியும். இவ் அதிகரிப்பு இரு கட்டங்களாக வழங்கப்படவுள்ளதாக பிரதமரும் நிதியமைச்சருமான டி. பி. விஜேயதுங்க தெரிவித்துள்ளார்.

1993ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட யோசனைகளை சமர்ப்பித்து உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாதாந்தம் 3000 ரூபாவிற்கும் குறைவான தொகையை ஆரம்ப சம்பளமாக பெறும் ஊழியருக்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதியிலிருந்து மேற்படி சம்பள அதிகரிப்பின் 60 வீதம் வழங்கப்படும்.

எஞ்சிய 40 வீதம் அடுத்த ஆண்டு யூலை மாதம் தொடக்கம் வழங்கப்படும்.

ஏனைய ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பில் 50 வீதம் அடுத்த ஆண்டு ஜனவரியிலிருந்தும் மிகுதி 1994-ம் ஆண்டிலும் வழங்கப்படும்.

நாட்டின் பாதுகாப்பிற்காக பெருமளவு பணம் செலவிடப்படுகிறது. இல்லாவிட்டால் சகலருக்கும் சம்பள அதிகரிப்பு வழங்கியிருக்க முடியுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

வரவு-செலவுத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் முக்கிய ஆலோசனைகள் வருமாறு:

★ பாதுகாப்பு ஒதுக்கீடு 1800 கோடி ரூபா.

★ பாரம்பரிய ஏற்றுமதி பயிர்கள் அபிவிருத்திக்கு ஊக்குவிப்பு வழங்கப்படும்.

★ தேயிலை விற்பனை மீதான வரி 30 வீதம் குறைப்பதற்கும் தேயிலை வரிவிலக்குக்கான விலை எல்லையை கிலோ 70 ரூபா அதிகரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

★ தேயிலைமீது விதிக்கப்படும் தீர்வை நீக்கப்படவுள்ளது. (க)

**ஹர்த்தால்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

செங்கலடி பகுதியில் ஹர்த்தால் அனுஷ்டிக்க கோரி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

**ஓய்வூதியருக்கு**

(1ம பக்கத் தொடர்ச்சி)

ளார்.

1993ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஒய்வூதியர்களுக்கான அதிகரிப்புக்கு அரசுக்கு 400கோடி ரூபா மேலதிக செலவு ஏற்பட்டுள்ளதாகவும் 1989ம் ஆண்டு முதல் 3,000 ரூபாவிற்கு குறையாமல் சம்பளம் பெறும் அரச மற்றும் ஒய்வூதியக்காரர்களுக்கு 500ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் இதற்கென 600 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும்பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

**பாதுகாப்பு**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மொத்த விற்பனை வரியும் புனரமைக்கப்படவுள்ளது. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அமைப்புக்கு மாறும்வரை இது ஒருமுகப்படுத்தப்படுமென்றும் வரவு-செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத்திட்டத்தில் வரிசம்பந்தமாக ஏனைய ஆலோசனைகள் வருமாறு;

கூட்டிணை வருமான வரி அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து 40 வீதமாகக் குறைக்கப்படும். ஏற்றுமதி வரி அமைப்பும் ஒரு முகப்படுத்தப்படவுள்ளது.

இறக்குமதி தீர்வைகள் மீளாய்வு செய்யப்பட்டு புதிதாக அமைக்கப்படவுள்ளன.

வரிவீதங்களும் 3 தொடக்கம் 10 சத வீதம் என்றும் 15 சத வீதம் என்றும், 20 சத வீதமென்றும் அமைக்கப்பட்டுள்ளன 1993ம் ஆண்டுக்கான உத்தேச வருமானம் 10,330 கோடி ரூபா செலவீனம். 16,730 கோடி ரூபா. இவற்றின் அடிப்படையில் துண்டுவிழும் தொகை 6,400 கோடி ரூபாவாகும். (வி)

**கிழக்கில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யினரை ஊக்குவிக்கும் முயற்சியில் உயர் இராணுவ அதிகாரிகள் சிலர் தற்போது தீவிரமாக ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

**ராணுவத்தில்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிக்கி உயிரிழந்த பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவ உட்பட 15 உயர் இராணுவ அதிகாரிகள் உயிரிழந்ததைத் தொடர்ந்து அச்சமடைந்த இராணுவத்தினர் இராணுவத்தைவிட்டு ஓடுவதினால் மேற்படி தொகையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதனால் இலங்கை அரசு பெரும் சஞ்சலமடைந்துள்ளதாகவும், புதியவர்களை இராணுவத்துக்கு சேர்ப்பதற்கு அரசு புதிய யுக்திகளை தற்போது கையாளுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க)

**புலிகள் மீதான**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு யுத்தத்தை இவ்வருட இறுதிக்குள் முடிவுக்குகொண்டு வருமாறு படையினரைக் கேட்டுக் கொண்டமைக்கு பதிலளிக்கும் வகையிலேயே கேர்ணல் சரத் முனசிங்கா இவ்வாறு தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. (சு)

**1993ம் ஆண்டுக்கான**

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

மேயானுல் வருடாந்தம் 1 200 கோடி ரூபாவை மீதப்படுத்த முடியும் இந்தப்பணத்தை நாட்டின் பல்வேறுஅபிவிருத்தி திட்டங்களுக்கும் பயன்படுத்த முடியும். (இ)

**யாழ்-திருமலை**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதிகளோடு ஒரு தடவையில் பிரயாணம் செய்யமுடியும் என்று அத்தியாவசிய சேவைகள் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்

இந்தக்கப்பலில் பயணத்திற்கு பிரயாணி ஒருவரிடமிருந்து இருநூறு ரூபா வரை அறவிடப்படும்.

திருமலையிலிருந்து புறப்படும் கப்பல் காங்கேசன் துறைக்கும் தீவுப் பகுதிக்கும் செல்லும். இச்சேவையில் ஈடுபடுவதற்கு கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்துவதற்காக பம்பாயிலுள்ள கப்பல் நிறுவனம் ஒன்றுடன் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம்உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடவுள்ளது.

இக்கப்பல் சேவையைத் தொடர்ந்து கிளாலிப் பாதை பொதுமக்களின் பாவனைக்கு முற்றாக தடைசெய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ரி)

**புலிகளே**

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுப்படை யாழ்ப்பாண நகரை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு மேற்கொள்ளவிருக்கும் எந்தவொரு படை நடவடிக்கையையும் முறியடிக்கும் போரில் புலிகள் முக்கிய பங்கை வகிப்பர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சாஸ்திரிக்குப் பின்பு சிறந்த பிரதமர் ராவ்

(புதுடில்லி)

முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரிக்குப்பின் இந்தியாவில் முதல்தரமான பிரதமர் பி. வி. நரசிம்மராவ்

பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் எல். கே. அத்வாணி கட்சியின் தேசிய கமிட்டிக் கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்துள்ளார். (க)

## சிகரெட், மதுபானம் விலை அதிகரிப்பு இல்லை

(கொழும்பு)

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் சிகரெட்வகைகள் மதுபானம் மற்றும் பாவனையாளர் நடுத்தரப் பொருட்களுக்கு வரி அதிகரிப்பு எதுவும் விதிக்கப்படவில்லை.

வழமையாக ஒவ்வொரு வரவுசெலவுத் திட்டத்திலும் சிகரெட், மதுபான வகைகளுக்கு வரி அதிகரிப்பு விதிக்கப்படுவது வழக்கம்.

ஆனால் நேற்றைய வரவு செலவுத்திட்டத்தில் இவற்றிற்கான வரிகள் அதிகரிக்கப்படாதது பாவனையாளர் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## பணம் பறிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் தமிழ் இளைஞர்களிடம், கொழும்பில பணம் பறிக்கும் கோஷ்டிகள் செயற்படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கனடாவில் இருந்து வந்த ஒருவரிடம் இக்கோஷ்டி பணம் பறிக்கப்பட்ட சம்பவம், அண்மையில் கொழும்பில் நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. (சு)

## மேலும் பலர் விலகினர்

(கொழும்பு)

லலித்-காமினி கட்சியிலிருந்து மேலும் பலர் விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திரு ரெனி டிமெல், திருமதி மல்லிகா ரெனி டிமெல் ஆகியோரை ஆதரித்தே மேலும் பலர் இக்கட்சியிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ரி)

**பரீட்சை எழுத**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்திலுள்ள பல்வேறு திணைக்களங்களிலும் பணிபுரி பலர் பல கஷ்டத்தின் மத்தியில் கொழும்பு சென்றிருந்தனர்.

ஆனால் இப்பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கடந்த 29ந் திகதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் ஏமாற்றத்துடனும் கவலையுடனும் திரும்பி வந்துள்ளனர். (71)

**இந்தியா**

1ம் பக்கத் தொடர்ச்சி)

புதுடில்லியில் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (க)

## இன்று

(யாழ்ப்பாணம்)

திரு. கலைஞானி சேகரித்து வைத்த கலைப்பொருட்களை எப்படிப் பாதுகாத்துவைக்க வேண்டுமென்றுஆராய்வதற்கு ஒரு ஆலோசனைக்கூட்டம் நல்லை கம்பன் கோட்ட மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பி. ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

## பாதுகாப்பில் மாற்றம்

புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலைவழக்கின் தீர்ப்பு நாட்டின் பாதுகாப்பில் பெரும்மாற்றங்களை ஏற்படுத்தக்கூடுமென்றுசிறப்பு புலனாய்வுப்பிரிவின் பிரதிஇயக்குநர் திரு. கார்த்திகேயன் கூறியுள்ளார். (வி)

## இலவசம்

(யாழ்ப்பாணம்)

சிறகவரை வேண்டுவோர் தபால் மூலம் பெற்றுக் கொள்ள ரூ.2/- அஞ்சல் முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாமென மில்க்வைற் அதிபர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerrd as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/IO 336/8